# ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்திற்கும் சொந்தமானவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## நாகை மாவட்டக் கழக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

நாகை, நவ. 26-

**நாகை மாவட்டக் கழகம் சார்பில் விவசாயிகள், மீனவர்கள், தூய்மைப் பணியாளர்கள், விளையாட்டு வீரர்கள் என 2,500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை, நாகையில் நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.**

**இதற்கான விழாவில் ஏராளமான பயனாளிகள், பொது மக்கள் மற்றும் கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர். அப்போது முத்தமிழறிஞர் ``கலைஞரை யாராலும் தங்களுக்கென உரிமை கொண்டாட முடியாது. ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழ் மக்களுக்கும் சொந்தமானவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

இங்கு பேசும் பொழுது நம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் சொன்னார்கள். கலைஞர் நாகப்பட்டினம் மாவட்டம், நாங்கள் திருச்சி மாவட்டம் என்று. ஒவ்வொருவரும் கலைஞருக்கு உரிமை கொண்டாடினார்கள். கலைஞரை யாராலும் உரிமை கொண்டாட முடியாது. ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழ் மக்களுக்கும் சொந்தமானவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### கலைஞர் சிலைத் திறப்பு!

அதனால்தான் இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், எந்தத் திட்டம் தொடங்கினாலும், அவர் பெயரை வைக்கிறோம். கலைஞருக்கு, துறையூரில் முழு உருவ சிலையைத் திறந்து வைத்துவிட்டு, திருச்சியில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு நாகப்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தேன். தமிழ்நாடு முழுக்க ஒவ்வொரு சட்டமன்றத்திலும் கலைஞரின் சிலையைத் திறக்க வேண்டும் என்று நம் கழகத் தலைவர் ஆணையிட்டு இருக்கிறார்.

இன்றைக்கு நாகை மாவட்டக் கழகத்தின் சார்பாக விவசாயிகள், மீனவர்கள், தூய்மைப் பணியாளர்கள், விளையாட்டு வீரர்கள் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 500 பேர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்லும் போதும், அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கழக நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அந்த மாவட்டச் செயலாளர்களிடம் நான் வைக்கின்ற ஒரே ஒரு கோரிக்கை.

### நலத்திட்ட உதவிகள்!

நான் கண்டிப்பாக வருகிறேன். எத்தனை நிகழ்ச்சிகளில் வேண்டுமானாலும் கலந்துகொள்கிறேன். ஆனால், எனது மனதிற்கு நெருக்கமான ஒரு நிகழ்ச்சி என்றால், `கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி. அதே போல் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்ச்சிகளை நடத்துங்கள்', என்று சொல்வேன். அப்படிக் கட்டளை இட்டு வேண்டுகோள் வைத்து, அண்ணன் கௌதமன் அவர்கள் சென்ற வருடம் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சியை நடத்தினார்.

இன்றைக்கு காலை, நம் அக்கரைப்பேட்டை மனோகரன் அவர்களின் இல்லத் திருமண விழா நடந்தது. அந்தத் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகத்தான் வந்திருந்தேன். அந்தத் திருமண நிகழ்ச்சிக்குத்தான் தேதி கொடுத்திருந்தேன். `அதோடு சேர்த்து, நான் நல திட்ட நிகழ்ச்சியும் நடத்துகிறேன்' என்று சொல்லி எனக்குப் பிடித்தமான நலத்திட்ட நிகழ்ச்சியையும் கௌதமன் அவர்கள் மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார். அவருக்கு இளைஞர் அணியின் சார்பாக, பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



என்னதான் ஊரெல்லாம் சுற்றிக்கொண்டு இருந்தாலும், கடைசியாக வீட்டுக்குப் போய்த் தானே படுத்தாக வேண்டும். அது மாதிரிதான் எங்கெல்லாம் ஊர் சுற்றினாலும், கடைசியில் என் சொந்த மாவட்டத்திற்கு வந்து இருக்கிறேன். இந்த நாகப்பட்டினத்திற்கு வரும் பொழுது எப்பொழுதுமே என் தாயின் மடியில் படுத்திருப்பது போல ஒரு சுகமான அனுபவம் இருக்கும்.

### கலைஞரைத் தந்த மாவட்டம்!

நாகையில் கோடியக்கரையில் தொடங்கி, இப்பொழுது மயிலாடுதுறை மாவட்டத்தில் இருக்கின்ற கொள்ளிடம் வரையில் எத்தனை பெருமைகள் உண்டு. இயற்கை வளம் கொழிக்கின்ற பூமி இது. கடல் வளம், நீர் வளம், வேளாண் வளம், இலக்கிய வளம், பண்பாட்டு வளம் என்ற அனைத்தும் ஒரே இடத்தில் இருக்கின்ற பெருமை இந்த நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மட்டும்தான் உண்டு. அந்த நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இன்னொரு மிகப் பெரிய பெருமை இருக்கிறது என்றால், இது வரலாற்றுக்கும் பெருமை சேர்க்கின்ற வகையில் சிறப்புச் சேர்க்கின்ற வகையில், இது நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தந்த மாவட்டம். அதிலே உங்களைப்போல் நானும் பெருமை கொள்கிறேன்.

இத்தனை பெருமைக்குரிய இந்த நாகை மாவட்டத்தின் சார்பாக, நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவை ஏற்பாடு செய்துள்ள கௌதமன் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இந்த மேடைக்கு வரும் பொழுது வருகின்ற வழியெல்லாம் வரவேற்பு. நேற்று திருச்சி விமான நிலையத்தில் ஆரம்பித்து, துறையூர் சென்று சிலையைத் திறப்பதற்கு மூன்று மணி நேரம் ஆகிவிட்டது. வழியெல்லாம் பொதுமக்கள், கழகத்தினர், ஒவ்வொரு அணியினர் தொ.மு.சவை சேர்ந்தவர்கள் எல்லோரும் வரவேற்பு கொடுத்தார்கள்.

### மக்களின் அன்பும் உணர்ச்சியும்!

இந்தத் திருமணத்தை முடித்துவிட்டு, இந்த நிகழ்ச்சிக்கு வரும்பொழுது நம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சொன்னதைப்போல முதலில் நாங்கள்தான் கேக் வெட்டினோம் என்று சொன்னார். உண்மையாகவே, ஒரு குழந்தை என்னிடம் வந்து எனக்குப் பிறந்தநாள் வாழ்த்துச் சொல்லி கேக் வெட்டியது. கேக் மட்டும்தான் வெட்ட வேண்டும் இல்லை, விட்டிருந்தால் என்னையே வெட்டி இருப்பார்கள் என் சட்டையைப் பார்த்தீர்கள் என்றால் தெரிந்திருக்கும். இன்னும் சட்டை மட்டும்தான் கிழிய வில்லை. அந்த அளவிற்கு மக்களின் அன்பும் உணர்ச்சியும் இருந்தன.

இந்த மாவட்டத்திற்குப் பலமுறை வந்து இருக்கிறேன். இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத் துறை அமைச்சராக வந்து இருக்கிறேன். ஆனால், முதல் முறையாக தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்று, உங்களின் வாழ்த்துகளைப் பெற வந்து இருக்கிறேன். துணை முதலமைச்சர் பொறுப்பை, தலைவர் கொடுத்தவுடன் தமிழ்நாட்டில் இருந்து அனைத்து நிர்வாகிகளும் என்னை வாழ்த்த சென்னைக்கு வந்தார்கள்.

நான் ஒரு கோரிக்கை வைத்தேன், `தயவு செய்து யாரும் வராதீர்கள் நிறைய வேலைகள் இருக்கிறது. கட்சி நிகழ்ச்சிகள் இருக்கின்றன. கட்சிப் பணிகள் இருக்கின்றன. நானே உங்கள் மாவட்டத்திற்கு வந்து, உங்களை எல்லாம் நேரில் சந்திக்கிறேன்' என்று சொன்னேன். அந்த வகையில், இன்றைக்கு உங்களையெல்லாம் சந்தித்து, உங்களின் வாழ்த்துக்களைப் பெறுவதற்காக வந்து இருக்கிறேன்.

மேடைக்கு வரும் பொழுது சொன்னார்கள். நலத்திட்ட உதவிகள் என்றால், எல்லோருக்கும் ஒரே மாதிரி இல்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் எதற்கு எடுத்தாலும் `ஒரே நாடு, ஒரே ஆடை, ஒரே மொழி, ஒரே உணவு, ஒரே தேர்தல், ஒரே கலாச்சாரம்' என எல்லாவற்றிலும் ஒரே விஷயத்தைத் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம் திராவிட மாடல், தி.மு.க மேடையில் பார்த்தீர்கள் என்றால், அண்ணன் கௌதமன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த விழா அப்படிக் கிடையாது.

### யார் யாருக்கு என்னென்ன தேவை?

யார் யாருக்கு என்னென்ன தேவை என்பதை உணர்ந்து, அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப, பல்வேறு பொருட்களை வழங்குகின்ற இந்த விழா மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்குத் தேவையான மண்வெட்டி, ஸ்பிரேயர் போன்ற பொருட்கள் இங்கு வழங்கப்பட இருக்கின்றன. மீனவ நண்பர்களுக்கு, மீன் பிடிப்பதற்கு உதவக் கூடிய `மீன்பிடி வலை', `ஐஸ் பாக்ஸ்' போன்று உபயோகமாக இருக்கும் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் நல்ல ஆரோக்கியத்துடனும் உற்சாகத்துடனும் விளையாட வேண்டும் என்று அவர்களுக்கு `விளையாட்டு உபகரணங்களை' நம் கௌதமன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார். அதேபோல் தூய்மைப் பணிகளில் ஈடுபடக் கூடிய தோழர்களுக்கு, அவர்களுக்கு உதவக்கூடிய பொருட்கள் வழங்கப்பட உள்ளன.

இப்படி இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவை நல்ல வகையில் திட்டமிட்டு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நாகை மாவட்ட தி.மு.க நிர்வாகிகளுக்கு மீண்டும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாயிலாக அடுக்கடுக்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் அ.தி.மு.க.வைப் பார்த்தீர்கள் என்றால், அவர்களும் நிகழ்ச்சிகள் நடத்துகிறார்கள். கள ஆய்வுகள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும் இரண்டு மூன்று கள ஆய்வு நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் செய்திகளாகவே வந்தன. அ.தி.மு.கவின் பொருளாளர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் ஒரு கள ஆய்வில் பேசுகிறார். நிர்வாகிகளை வைத்துக் கொண்டே பேசுகிறார். `என்னய்யா, இது, நம்ம கூட்டணிக்கு கூப்பிட்டால், ஒருவன் நூறு கோடி கேட்கிறான், 20 தொகுதி வேணும் என்று சொல்கிறான்' என்று பேசுகிறார். எந்தக் கட்சிக்காவது இப்படி ஒரு நிலைமை வந்திருக்கிறதா? ஆனால், நம் தி.மு.க கூட்டணியைப் பாருங்கள்.

### 100 சதவிகித வெற்றி!

நம் தலைவர் அவர்கள் நம் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை தேர்தல்களிலும் முழு வெற்றியைப் பெற்றுள்ளார். ஒரு மிகப் பெரிய வெற்றிக் கூட்டணியை, கொள்கைக் கூட்டணியை நம் தலைவர் அவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார். அந்தக் கொள்கைக் கூட்டணி எப்படி 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 100 சதவிகித வெற்றியை பெற்றதோ அதேபோல் வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும், தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார் 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றாக வேண்டும்.

கண்டிப்பாக இந்த நாகை மாவட்டம் 100 சதவிகித வெற்றியைப் பெற்று தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தலைவர் அவர்கள் தொடர்ந்து நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்றரை வருடங்களாக என்னென்ன திட்டங்கள் மக்களுக்குத் தேவையான அத்தனை திட்டங்களையும் நாம் தேர்தல் அறிக்கையில் சொன்ன அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்.

ஒரு சில வாக்குறுதிகளை மட்டும் இங்கு உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வந்தவுடன் முதல் கையெழுத்து போட்டார். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி திட்டத்தை அறிவிப்பேன் என்று சொன்னார். எதிர்க்கட்சிகள் அப்போது முடியவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி திட்டத்தை உருவாக்கினார். ஒவ்வொரு மகளிரும் கிட்டத்தட்ட மாதம் ஆயிரம் ரூபாய் வரைக்கும் சேமிக்கிறார்கள்.

### பெண்கள் உயர்கல்வி!

பெண்கள் படிக்க வேண்டும் பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு வந்தால் மட்டும் பத்தாது, உயர் கல்வி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து, உயர் கல்வி சென்று படித்தார்கள் என்றால், அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் என்ற திட்டத்தில் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை கொடுக்கப்படுகிறது. கிட்டதட்ட 3 லட்சம் மாணவிகள் ஒவ்வொரு வருடமும் அதில் பயன் பெறு கிறார்கள்.

தமிழ்ப்புதல்வன் என்ற திட்டம் மாணவர்களும் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று அவர்களுக்கும் கொடுக்கிறார். அது மட்டுமல்ல குழந்தைகள் படிக்க வேண்டும். பள்ளிக்கு வரவேண்டும் என்று, வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்கள் பசியோடு குழந்தைகளை அனுப்பி விடுவார்கள். அதே யோசனையில் இருப்பார்கள். பையன் போனானே, குழந்தை சாப்பிட்டதா, பசி மயக்கத்தில் இருந்ததா என்று கவலைப்படுவார்கள். ஆனால், அதைப் போக்குகின்ற விதமாக இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு திட்டம். அதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். திங்கள் முதல் வெள்ளி வரை ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற 20 லட்சம் குழந்தைகள் அந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள்.

பெற்றோர்கள், இப்போது குழந்தைகளை வாழ்த்தி, தைரியத்தோடு அனுப்புகிறார்கள். என் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு நம் திராவிட மடல் அரசு இருக்கிறது. எங்கள் முதலமைச்சர் எங்கள் குழந்தைகளைப் பார்த்து கொள்வார் என்று அந்தத் தைரியத்துடன் அனுப்புகிறார்கள்.

இந்தத் திட்டத்தை எல்லாம் மக்களிடம் கொண்டு போய் நீங்கள் சேர்க்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் பணிகளைப் பிரித்துக்கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் பத்து வாக்குகளுக்கு நான் பொறுப்பு என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### மகளிர் உரிமைத்தொகை திட்டம்!

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாகத்தான் கலைஞர் மகளிர் உரிமை தொகைத் திட்டம் என்று ஒன்றை அறிவித்தார். சென்ற வருடம் செப்டம்பர் மாதத்தில் இருந்து கொடுக்க ஆரம்பித்து விட்டோம். பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் கொடுக்க ஆரம்பித்து விட்டோம். அதில் விண்ணப்பித்தவர்கள் ஒரு கோடியே 55 லட்சம் மகளிர். அது பரிசீலனை செய்யப்பட்டு இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த நேரத்தில் ஒரு வாக்குறுதியைக் கொடுக்கிறேன். அதில் ஒரு சில குறைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். `எங்களுக்கு வரவில்லை பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு வந்துவிட்டது'. நான் உறுதியாகச் சொல்கிறேன் கண்டிப்பாக அந்தக் குறைகள் எல்லாம் நீக்கப்பட்டுத் தகுதியுள்ள அத்தனை மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மாதம் ஆயிரம் ரூபாய் நிச்சயமாக வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுக்கிறேன்.

தலைவர் அவர்கள் சென்ற பொதுக்குழுவில் கூடத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருக்கிறார். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளில் 200 தொகுதிகளில் வெற்றிபெற்று, மிகப் பெரிய வெற்றியை திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சியில் அமரப்போகிறது. தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக அமரப் போகிறார் என்றால், அது உங்கள் கையில்தான் இருக்கிறது.

அந்தப் பணியை இன்றிலிருந்து நீங்கள் தொடங்க வேண்டும் என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, கௌதமன் அவர்களை வாழ்த்தி, வந்திருக்கின்ற அனைத்து அமைச்சர்பெருமக்களையும் வந்திருக்கின்ற பயனாளிகள் உங்கள் அனைவரையும் வணங்கி எனக்கு இந்த வாய்ப்பு கொடுத்ததற்கு மீண்டும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், மாவட்டக் கழகச் செயலாளர், கௌதமன், விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் மதிவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.கே.வேதரத்தினம், காமராஜ், புதுவை மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் காரைக்கால் நாஜிம், தியாகராஜன், கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் இளையராஜா, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலத் துணைத் தலைவர் சாகுல் ஹமீது, செல்வம், ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம் நீலமேகம், லோகநாதன், மேகநாதன், கோவிந்தராஜன், மறைமலை, சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் பால அருட்செல்வன், திருவாரூர் சங்கர், ஜெயபிரகாஷ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வடுவூர் ராஜேந்திரன், மாரிமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கார்த்திக், குமார், துணை அமைப்பாளர்கள் அசோக், தாமோதரன், கலையரசன், டேனியல் சத்யா, சுரேஷ்குமார், பன்னீர்செல்வம், நகர அமைப்பாளர் சத்யன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

---

கழக வழக்கறிஞர் அணி சார்பில் - இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை!

## தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வாசிக்கும் நிகழ்ச்சி!

### சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, நவ. 26–

கழக வழக்கறிஞர் அணி சார்பில் இந்திய அரசியலமைப்பின் 75 வது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்திய அரசியலமைப்பின் முகப்புரையை தமிழ் நாடு மற்றும் புதுவை மாநிலங்களில் உள்ள அனைத்து நீதி மன்றங்களிலும் வாசிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது என கழக சட்டத் துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:–

கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75வது ஆண் டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் இன்று (26.11.2024) காலை 11 மணிக்கு நமது அணியின் நிர்வாகிகள் மாவட்ட நீதி மன்றங்கள் மட்டும் இல்லாமல் மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்கறிஞர் அணி நிர்வாகி கள் அவர்கள் பணி செய்யும் இடங்களில் அங்கு இருக்கும் நம்முடைய கழக வழக்கறிஞர்கள் மற்றும் பொதுவான வழக்கறிஞர்கள் அனைவரையும் அழைத்து அரசியல் அமைப்பு சட்டத்தின் முகப்புரையை (preamble) முதலில் தமிழிலும் பிறகு ஆங்கிலத்திலும் வாசித்து சமூக வலைதளங்களில் பதிவிட வேண்டும். முடிந்த வரையில் தொலை காட்சி நிருபர்களை தொடர்பு கொண்டு நிகழ்ச்சியை ஒளிபரப்பு செய்திட ஆவன செய்ய வேண்டும்

குறிப்பு: இந்த அரசியல் அமைப்பின் முகப்புரை வாசிக்கும் நிகழ்ச்சியானது அனைத்து நீதிமன்றங்களிலும் சரியாக 11 மணிக்கு நடத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



வன்னியர் நலவாரிய உறுப்பினராக விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா நியமிக்கப்பட்டதையொட்டி அமைச்சர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணியிடமும் வாழ்த்துப் பெற்றார்.

---

கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள்!

### நல உதவிகள் வழங்கி கொண்டாடப்படுகிறது – தே.மதியழகன் அறிக்கை!

*கிருஷ்ணகிரி, நவ. 26-*

*கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா. சிறப்பான முறையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. இது குறித்து மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-*



*கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான இளம் தலைவர் அவர்களின் 48 வது பிறந்தநாள் விழா இளைஞர்களின் எழுச்சி நாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் சார்பாகவும், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் சார்பாகவும் 27.11.2024 முதல் ஒரு மாத காலத்திற்கு பிரமாண்டமான முறையில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.*

*மாவட்டக் கழகத்தின் சார்பாக கழக கொடியேற்றி, 4800 பேருக்கு அறுசுவை விருந்து வழங்கியும், மேலும் ரத்ததான முகாம் மற்றும் இலவச மருத்துவ முகாம் நடத்தி சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.*

*டிசம்பர் 5 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான இளம் தலைவர் அவர்களின் திருக்கரங்களால் காவேரிப்பட்டணம் ஒன்றியம் பையூரில் 100 அடி உயர கம்பத்தில் கழக கொடி ஏற்றி, இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடுவது எனவும்,*

*இளம் தலைவர் அவர்களின் திருக்கரங்களால் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் வழங்கியும், 100 பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கியும், 100 சலவை தொழிலாளர்களுக்கு சலவை பெட்டிகளையும், சவரத் தொழிலாளர்கள் 50 பேருக்கு அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களையும் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருக்கரங்களால் வழங்கப்பட உள்ளது.*

*கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் பணிபுரியும் 1500 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு வேட்டி, புடவைகள் உள்ளிட்ட நலத் திட்ட உதவிகள் வழங்கியும்,*

*27 ஆம் தேதி அன்று கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள நகர, ஒன்றிய, பேரூர் கழகங்களிலும், அனைத்து கிளைகளிலும் திராவிட முன்னேற்றக் கழக கொடி ஏற்றியும், பொதுமக்களுக்கு, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகளை வழங்கியும், அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.*

*27 ஆம் தேதி அன்று கிருஷ்ணகிரி TCR மருத்துவமனையில் மாவட்ட மருத்துவர் அணி சார்பில் ரத்த தான முகாம் மற்றும் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களிலும் ரத்த தான முகாம் மற்றும் இலவச மருத்துவ முகாம்களும் நடைபெற உள்ளன.*

*என மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*